343

17 JUL 1931

Registered No. M. 2445.

உ

சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம்

ஸ்ரீ சிவஞானபாலைய தேசிக சுவாமிகள்

அருட் கொடையால்,

தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றக்

கழகத்தினின்றுவரும்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் க | சுக்கிலஆண்டு ஆவணித்திங்கள் 1929 — ஆகஸ்டு. | இதழ் அ

க. ஆருவது தமிழ்நாட்டு வீரசைவ சித்தாந்த மகாசங்கம், பிரமபுரம் :—

உ. ஸ்ரீபசவேச விஜயம் :—

ஙு. பெண்பாலர் :—

ச. வீரசைவ வைதீகத்துவம் :—

ரு. சிவபூசையின் பெருமையும், இன்றியமையாமையும் :—

சு. வேடிக்கைத் துணுக்குகள் :—

எ. வீரசைவர்களின் முன்னேற்ற வழிகள் :—

அ. தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள் :—

கூ. அபிஷேகமாலையுரை :—

பத்திராசிரியர் { வீ. குமாரவீரையர்,
'வீரசைவநிலையம்' முசிரி, திருச்சி ஜில்லா.

விவேகபானு பிரஸ் பிராஞ்சு, குளித்தலை.

"வீரசைவம்."

புரவலர் :—

போம்மபுரம் ஸ்ரீசிவஞானபாலயசுவாமிகள் சந்நிதானம்.

நிறைவேற்றற் கழகத்தார் :—

க. திருவாளர் G. C. சிக்கவீரப்பா அவர்கள் B. A., L. L. B.,
வழக்கறிஞர், டெங்கணிக்கோட்டை.

உ. " C. வைத்திலிங்கையர் அவர்கள், பெருவளநல்லூர்.

ங. " சிவப்பிரகாச ஐயரவர்கள், அரும்பாவூர்.

ச. " S. வேலாயுத ஐயரவர்கள், சொரத்தூர்.

ரு. " V. குமாரவீரையர் அவர்கள், முசிறி.

தொண்டர்கள் :—

1. திருவாளர் S. A. ருத்திரப்பா அவர்கள், புதுப்பேட்டை,
திருப்பத்தூர் T. வடார்க்காடு Dt.

2. " S. கந்தசாமி ஐயர் அவர்கள், தேத்தாக்குடி.

3. " நா. தி. கைலாயதேசிகர், வண்ணார்பண்ணை, ஜாப்னு.

4. " ச. நா. மூ. சுந்தரம்பண்டாரம், ஐயனூர்குளம்பட்டி,

கட்டுரை யெழுதும் பெரியார் :—

திருவாளர் G. C. வீரப்பா B. A., L. L. B., அவர்கள்,
வழக்கறிஞர், பெங்களூர்.

" உருத்திரசாமி ஐயர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
ஸ்ரீமத் ஞானியார் பாடசாலை, திருப்பாதிரிப்புலியூர்.

" பண்டிதர், ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
பிஷப் ஹீபர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்,
திரிசிரபுரம்.

" பண்டிதர், அ. கந்தசாமி பிள்ளையவர்கள், கவர்ன்மெண்டு
காலேஜ் தமிழ் விரிவுரையாளர், கும்பகோணம்.

" ஏகாம்பர ஐயர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
பச்சையப்பர் உயர்தர கலாசாலை, காஞ்சீபுரம்.

" வித்துவான் அ. வரதநஞ்சய பிள்ளை அவர்கள்,
ஸ்ரீகருணீக புராண நூலாசிரியர், ஜலகண்டபுரம்.

உ

சிவமயம்.

17 JUL 1931

"வீரசைவம்."

பொம்மபுரம் ஸ்ரீ சிவஞானபாலயதேசிகசுவாமிகள் அருட்கொடையால் தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றற் கழகத்தினின்று வரும் செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் க | சுக்கிலஆண்டு ஆவணித்திங்கள் 1929 —ஆகஸ்டு. | இதழ் அ

ஆறுவது தமிழ்நாட்டு

வீரசைவ சித்தாந்த மகாசங்கம், பிரமபுரம்.

எல்லாம் வல்ல இறைவராகிய சிவபெருமான் திருவருளால் புதுவையடுத்த பொம்மயபாளையம் என வழங்கும் பிரமபுரம்வீரசைவ மடாலயத்தின்கண் சுக்கில-ஆடி-மீ ரு, சூ (20, 21—7—1929) சனி, ஞாயிறு இவ்விரு தினங்களிலும் தமிழ் நாட்டு வீரசைவ சித்தாந்த மகா சங்கத்தின் ஆறுவது பெருங்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமத் ஞான ராஜதானியான இஷ்டம் பொம்மயபாளையம் பெரிய மடம் சிவகஞ்சி மயூராசல நிவாசயதீஸ்வர கர்த்தரான மயிலங்தேவஸ்தான ஆதீன பரம்பரை தர்மகர்த்தத்துவம் இராஜகுரு 18-வது பட்டம் **ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள்** அவ்வமயம் மகா சங்கத்தின் தலைவராக அமர்ந்தருளினர்கள். பற்பல இடங்களிலிருந்து வீரசைவ மாகேஸ்வரர்களும், பக்தர்களும், சைவப்பெரியார்களும் சந்நிதானத்தை தரிசிக்கவும், மகாசங்கத்து நிகழ்ச்சியைக் காணவும் பேரவாவுடன் வந்து குழுமியிருந்தார்கள். முதல் நாள் 16-வது பட்டத்து சுவாமிகளுடைய குருபூஜையானதால் காலையில் அபிடேக ஆராதனைகளும், மாகேஸ்வரபூசையும் செவ்வனே நடைபெற்றன. சுமார் 300 வீரசைவப் பெரியார்கட்குச் சிவபூசைக்குரிய சாதனப்பொருள்களும், ஆடைகளும் அளிக்கப்பெற்றன. பற்பல பந்திகள் வைத்து ஆயிரக்கணக்கான ஏழை மக்களுக்கும் உணவு

கொடுத்த காட்சியைக் காண்போர் "ஒரு கோடி பூதம் தொலைத்தற்கரிய செஞ்சாலிச் சோறும்", எனப் பாராட்டிய பெரியார் வாக்கை அதிசயோக்தியெனக் கூறுர்.

20—7—1929 பிற்பகல் நிகழ்ச்சி.

மாலை 4-மணிக்குக் கடவுள் வாழ்த்துடன் தொடங்கப்பெற்ற சங்க மண்டபத்தின்கண் தலைமை வகித்தருளிய ஸ்ரீமத் சுவாமிகளுக்கு மகாசங்கத்தின் தலைமைக் காரியதரிசி வி. குமாரவீரையர் வரவேற்பு வாழ்த்துப்பா வாசித்துச் சமர்ப்பித்தனர். வரவேற்பு வாழ்த்துப் பாக்களில் வீரசைவ சமூக முன்னேற்றத்திற்கும், சமய முன்னேற்றத்திற்கும் இன்றியமையாதனவாகிய வீரசைவ சாத்திரப் புத்தகசாலை, வீரசைவ பாடசாலை, வீரசைவத்திற்கெனத் தனித்ததோர் அச்சுக்கூடம் நிறுவுதல்வேண்டுமெனவும், மடாதிபதிகள் நகரங்கள்தோறும் எழுந்தருளி வீரசைவவுண்மையை உபதேசித்தருளல் வேண்டுமெனவும் வேண்டப்பெற்றிருந்தன.

தலைமைவகித்தருளிய சுவாமிகள் தாரகை நடுவண் தண்மதியுதித்தாற்போல் எழுந்து முன்னுரை கூறத் தொடங்கி, "மகா சங்கத்தை இனிது நடாத்தும் பேரவாவுடன் குழுமியிருக்கும் வீரசைவ சிகாமணிகளே! அன்பர்களே! இன்று இங்கு ஆறுவது மகாசங்கத்தை நடைபெறச் செய்ததும், உங்களையெல்லாம் ஒருங்கேகூட்டி வைத்ததும் ஆதிசிவஞானபாலைய சுவாமிகளுடைய திருவருளேயன்றி வேறன்று. நீங்கள் வரவேற்பு வாழ்த்துப்பாவில் பாராட்டிக்கூறிய வனைத்தும் அந்த ஆதிமூர்த்திக்கே உரியதாகுக. வரவேற்பு மூலமாக நீங்கள் வேண்டிய அனைத்திற்கும் நாளை முற்பகலில் நடக்கும் தீர்மான நிகழ்ச்சிக்கண் ஏற்ற விடைகூறி எம் கடமையைச் செய்யத் துணிகின்றேம். நமது வீரசைவ சமயமானது மிகப்பழமையாக இப்பாரத நாட்டின்கண் சிறந்து விளங்கிவருவது என்பதற்கு வேதாகம நூல்களும் ஆசாரிய பீடங்களுமே சான்றுகின்றன. இத்தமிழ் நாட்டின் கண்ணும் வீரசைவ தத்துவப்பிரகாச முதலிய நூல்களையும் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய சித்தாந்த சிகாமணி முதலிய நூல்களையும் ஆராய்வார்க்கு இச்சமயத்தின் உண்மைகள் புலனுகாமலிரா. இச்சமயத்தின் தற்கால நிலைமைக்கு வீரசைவ மடாதிபதிகள் வெளிப்போந்து வீரசைவப் பிரசாரஞ் செய்யாமையும், கும்பகோணம் வீரசிங்காதன பீடத்தின்கண் 30 வருடமாகத் தலைவரில்லாக் குறைவும்,

வீரசைவர்கள் கல்வியிலும் செல்வத்திலும் தக்கதோர் முயற்சியில் முற்பட்டு முன்னுக்கு வாராமையுமே காரணம் என்னலாம். வீரசைவர்களாகிய நீங்கள் வீரசைவத்திற்குரிய அட்டாவரணம், அட்ட சகிலம், பஞ்சசீலம் முதலிய உண்மைகளை ஆராய்ந்து அவற்றை மேற்கொள்ளல்வேண்டும். குருபத்தியில் சிறந்தவராதல்வேண்டும். மடாதிபதிகளும் தங்கடமையைச் சரிவரச் செய்தல்வேண்டும்." எனக்கேட்பவர் மனமுருகுமாறு எடுத்துக்கூறித் தம்மை இளமைப் பருவத்திலேயே பட்டத்திலமரச்செய்து பற்றுக்களை யொழிவித்து உண்மை நெறியிற் செல்லுமாறு பணித்தருளிய ஆதிசிவஞானபாலைய சிவாசாரிய சுவாமிகளுடைய திருவருளை வியந்து ஆசனத்தமர்ந்தருளினர்கள்.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் பாடசாலைத்தமிழாசிரியர் வீரமாகேசர் உருத்திரசாமி ஐயர் அவர்கள் 'உபதேசம்' எனத் தொடங்கி அங்கநியாசம், கரநியாசம், பிராணயாமம் முதலியவற்றின் உண்மைகளை எளிதில் விளங்குமாறு விளக்கிக்காட்டி ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் உபதேசம் பெற்ற முறையையுங் அதன் பயனையும் திருவர்சகத்தினின்றும் எடுத்துக்காட்டிச் சொற்சுவை, பொருட்சுவை நிரம்ப உபந்நியசித்தார்கள். காஞ்சீபுரம் பச்சையப்பர் உயர்தர கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் திரு. S. ஏகாம்பர அய்யரவர்கள் தாம் பாடிவந்த அரிய கருத்துக்களடங்கிய வாழ்த்துப்பாவை வாசித்து சுவாமிகளுடைய திருவடிக்கண் சமர்ப்பித்து மகிழ்வித்தார்கள். கும்பகோணம் கவர்ன்மெண்டு காலேஜ் தமிழ்ப்பண்டிதர் திரு பண்டித அ. கந்தசாமி பிள்ளையவர்கள் 'சிவப்பிரகாசர் கவியின்பம்' எனப் பேசத்தொடங்கி பெரியநாயகியம்மையார் சம்பந்தமாகப் பாடியுள்ள பாக்களிலுள்ள உலகியல் நூலியலின்பங்களை யாவர்க்கும் எளிதில் விளங்கும்படி எடுத்துக்காட்டிக் கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்ப் பேசி முடித்தார்கள். தலைமை வகித்த சுவாமிகள் உபந்நியாசங்களின் கருத்தைப் பாராட்டியுரைக்க முதல் நாள் கூட்டம் இனிது நடைபெற்றது.

21—7—1929 ஞாயிறு நிகழ்ச்சி.

முற்பகல் 9-மணிக்குக் கடவுள் வாழ்த்துடன் தொடங்கப் பெற்றது. புதுவை மாயாவாத திமிரபாநு ஸ்ரீ இரேவணசித்தையரவர்கள் தாம் பாடிவந்த இரங்கற்பாவைப் பாடிப் பொருளுரைத்தார்கள். பல ஆராய்ச்சியின்மேல் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

பிற்பகல் 3-மணிக்குத் தொடங்கப்பெற்றது. வளவனூர் திருவாளர் சக்கரபாணியோதுவார் அவர்கள் தேவாரத்திருமறையோதினார்கள். திருவனந்தபுரம் ஸ்ரீபாலயாநந்த சுவாமிகள் ‘மந்திரம்’ என்னும் அரிய பொருளை மேற்கொண்டு மந்திரங்களின் வகைகளையும், அவற்றுள் முறையாகச் சிறந்தவைகளையும், மந்திரங்களுக்குரிய ருஷி, சந்தசு, தேவதை முதலியவற்றின் பாகுபாட்டையும் விளக்கிக் காட்டினார்கள். காஞ்சீபுரம் பச்சையப்பர் உயர்தர கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ S. ஏகாம்பரய்யரவர்கள் ‘வீரசைவ தத்துவம்’ என்பதை மேற்கொண்டு ருக்கு முதலிய உயர்ந்த பிரமாணங்களால் விளக்கினார்கள். பெருவளநல்லூர் ஸ்ரீ சா. வைத்திலிங்கய்யரவர்கள் ‘அன்பு’ என்பதை மேற்கொண்டு அது பாசவன்பு, பசுவன்பு, பதியன்பு என முத்திறப்படுமெனவும், பதியன்பே மேலானதெனவும் பல உதாரணங்களால் விளக்கிக்காட்டினார்கள். திரு. கந்தசாமி பிள்ளையவர்கள் ‘சிவபுராணம்’ என்னும் விரிவுரையை மேற்கொண்டு சிவபுராணங்களின் வரலாறனைத்தும் ஒவ்வொரு உண்மையை அடக்கிக்கொண்டிருக்கின்றனவென்றும், தூல, சூக்கும காரண சரீரங்களில் இஷ்டபிராண பாவலிங்கங்கள் அமைந்திருக்கும் வீரசைவ நெறியைக்காண சமயங்கள் எல்லாவற்றுள்ளும் அதுவே சிறந்து நிற்கின்றது என்றும் பாராட்டிப் பேசினார்கள். காணக்கிளியனூர் ஸ்ரீ P. கல்யாண வீரையர் அவர்கள் சமூக முன்னேற்றத்தைப்பற்றி நம் சமய விதி விலக்குகளைச் சற்றுத் தளர்த்திவிடவேண்டுமென ஆர்வமுடன் பேசினார்கள். ஸ்ரீஉருத்திரசாமி ஐயரவர்கள் ‘சுப்பிரமணியாவதாரப் பெருமை’ யைத் திருமுருகாற்றுப்படை முதலியவற்றினின்றும் மேற்கோள் காட்டி யாரும் அன்புக்கடலுள் மூழ்குமாறு விளக்கிப் பேசினார்கள். சிதம்பரம் ஸ்ரீ சிவராமையர் அவர்கள் குருவடிவத்தை உருவகப்படுத்தியும், ஐயனார்குளம்பட்டி ஸ்ரீ சுந்தரலிங்கம் பண்டாரம் அவர்கள் திருநெல்வேலி வீரசைவாபிமானிகள் நிலைமையைப்பற்றியும் பேசினார்கள். வீ. குமாரவீரையரவர்கள் சிவப்பிரகாச சுவாமிகள் தமது பிரபந்தத்தில் திருக்குறளின் பெருமையையும், ஞானசாரியராகிய சிவஞானபாலைய சுவாமிகளுடைய பற்றற்ற அருட் கொடையையும் பாராட்டியுள்ள வியப்புக்களை எடுத்து விளக்கினார்கள். சபாநாயகராகிய சுவாமிகள் சொற்பொழிவாளர்கள் எடுத்துக்காட்டிய ஒவ்வொன்றிற்கும் சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத்தினின்றே மேற்கோள் எடுத்துக்காட்டிப் பாராட்டி

முடிப்புரை கூறியதுடன் வீரசைவ சமயமும், சமூகமும், இம்மகா சங்கத்தின் நோக்கமும், 'வீரசைவம்' என்னும் மாதப்பத்திரிகையும் சிறப்புற்று நீடூழி வாழவேண்டுமென வாழ்த்துரை கூறி யாவருக்கும் திருநீறளித்துத்தமது ஆசனத்தமர்ந்தருளினார்கள். தலைமைக் காரிய தரிசி அவர்கள் சுவாமிகளுக்கும் உபந்நியாசகர்களுக்கும் வந்தனமும் நன்றியறிதலுங் கூற மகாசங்கம் எதிர்பாராத சிறப்புடன் நன்கு நிறைவேறிற்று.

மகா சங்கத்தின் தீர்மானங்கள்.

1. மகாசங்கத்தின் நிரந்தரத் தலைவராகிய திருவாளர் ஆ. பொன்னு சாமி ஐயரவர்கள் சென்ற மாசி மாதத்தில் இறைவனடிச் சார்ந்தமையால் அவர்களது ஆத்மா சாந்தியடையவேண்டு மென்றும், ஷை தானத்திற்குத் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் பாடசாலைத் தமிழாசிரியர் வீரமாகேசர் **உருத்திர சாமி ஐயர்** அவர்களே தக்காரெனவுந் தீர்மானிக்கலாயிற்று.

2. 'வீரசைவம்' என்னும் பத்திரிகையின் நிறைவேற்றற் கழகத்து அங்கத்தினரது ஓர் தானத்திற்கு டெங்கணிக்கோட்டை திருவாளர் G. **சிக்கவீரப்பா** B. A., L. L. B., அவர்களே தக்காரெனத் தீர்மானிக்கலாயிற்று.

3. ஆங்கில கலாசாலைகளில் பயிலும் வீரசைவ ஏழை மாணவர் களுக்கு உபகாரச் சம்பளங் கொடுத்து உதவிபுரிய நம்மவர் முன் வரவேண்டுமெனத் தீர்மானிக்கலாயிற்று.

4. வீரசைவ சுபாசுபக்கிரியைகளை வடநாட்டை யனுசரித்துத் தமிழ் நாட்டிலும் ஒருபடித்தாய் நடத்தப் பல பத்ததிகளை ஆராய்ந்து ஓர்வழிப்படுத்தி ஓர் நூலாக வெளியிடவேண்டு மெனத் தீர்மானிக்கலாயிற்று.

5. வடநாட்டு வீரசைவர்களுடன் கூடிப் பழகுதற்குதவியாக இத் தமிழ் நாட்டு வீரசைவ மாணவ மாணவிகளுக்குக் கன்னட மொழியைக் கற்பிக்க ஒவ்வொருவரும் முயற்சிக்கவேண்டு மெனத் தீர்மானிக்கலாயிற்று.

6. 'வீரசைவம்' என்னும் நமது பத்திரிகையை இலகுவில் என்றும் நடத்தி வரவும், வீரசைவ நூல்களை எண்ணியவாறு அச்சிட்டு

வெளிப்படுத்தவும் தனித்ததோர் **அச்சுநிலையக்கூடம்** நிறுவவேண்டுமெனவேண்டிக்கொள்ள, பொம்மபுரம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் மகா சந்நிதானம் முன்னரே கையொப்பமிட்டிருக்கும் ஆயுட்சந்தாதாரரிடமிருந்து வசூலாகுந் தொகையுடன் வேண்டுந் தொகையனைத்தையும் தாமே கொடுத்து உதவுவதாகக் கருணையுடன் வாக்களிக்க, அங்ஙனமே நிறுவலாமெனத் தீர்மானிக்கலாயிற்று.

7. வீரசைவ மாணவர்கட்கு உண்டி உடை முதலியன இலவசமாகக் கொடுத்து சமயாசார நூற்பயிற்சிக்கு உதவியாக வடமொழியுடன் தென்மொழியும், ஆங்கில மொழியும் கற்பிக்க தனித்ததோர் **வீரசைவ பாடசாலை** ஒன்று ஏற்படுத்தவேண்டுமெனவேண்டிக்கொள்ள, தலைமை வகித்த ஸ்ரீமத் சுவாமிகளே பொம்மபுரத்தின்கண் மடாலயத்தின் செலவிலேயே கூடிய விரைவில் ஏற்படுத்துவதாகக் கருணைகூர்ந்தருள்செய்ய மேற்கண்டவாறு செய்யலாமெனத் தீர்மானிக்கலாயிற்று.

8. வீரசைவ சமூக முன்னேற்றத்திற்குதவியாக நிதி சேர்த்தற்பொருட்டு சீட்டு 1-க்கு 0—8—0 வீதம் 20000 ரூபாய் தொகுக்கக் கூடிய **லாட்டரி சீட்டு** நடத்தவேண்டுமெனத் தீர்மானிக்கலாயிற்று.

9. வீரசைவ சமய சரித்திரங்களைச் சுருக்கமாகவும், எளிய நடையிலும், குறைந்த விலையிலும் அச்சிட்டுப் பரவச்செய்ய வேண்டுமெனத் தீர்மானிக்கலாயிற்று.

10. தண்டமிழ்நாட்டின் தனித்தவப்பயனெனப் பாராட்டத்தக்க பெரியாராகிய திருப்பாதிரிப்புலியூர் திருக்கோவலூர் **ஆதீனம் ஸ்ரீமத் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்** இவ்வமயம் அடைந்துள்ள நோயினின்றும் நீங்கிக் குணமடைந்து நீண்ட ஆயுளுடன் இந்நிலவுலகத்தில் நிலவித்தமிழ்நாட்டிற்கும் நம் வீரசைவத்திற்கும் உரிய உயரிய கடமைகளைச் செய்து சிறந்து விளங்க இறைவனருளை வேண்டிக்கொள்ளவேண்டுமெனக் கொண்டுவந்த தீர்மானம் சுவாமிகளுடைய வாழ்த்துரையுடன் நிறைவேறிற்று.

சுபம். சுபம். சுபம்.

ஸ்ரீபசவேச விஜயம்.

திருவாளர், G. C. வீரப்பா B. A. L. L. B., அவர்கள்,
டெங்கணிக்கோட்டை.

(முன் தொடர்ச்சி.)

நீலகண்டன்,—ஏன் நமது பசவேசர் சில நாளாக ஓர் விதமாக இருக்கின்றார்? கூப்பிட்டாலும் சரியாகப் பேசுவதில்லையே.

சிவநேயன்,—அவர் ஏதோ நுணுகிய யோசனைசெய்துகொண்டிருப்பவர் போல் காணப்படுகின்றார்.

வீமன்,—அவருக்கென்ன யோசனை? அவர் வேண்டிய பணமுடையவராயிருக்கின்றனர். பெற்றோர்கள் ஒன்றை விரும்புமுன் வாங்கிக் கொடுக்கின்றார்கள். வேண்டிய ஆடை அணிகளை வரவழைக்கின்றார்களே, இன்னுமென்ன யோசனை?

நந்தீசன்,—என் வீட்டில் தின்பண்டமேயில்லை. என் தாயாரைக் கேட்டால் அவர் வாக்கில் இல்லை இல்லை என்ற மொழிகள் வருகின்றனவேயன்றி உண்டென்ற சொல் ஒரு பொழுதும் வரக்காண்கிலேன். அது என் குறை! வசவேசர்க்கென்ன? அவர் வேண்டாமென்றாலும் அவரது தாயாரே கட்டாயப்படுத்திக் கொடுக்கிறார். எனக்கும் அப்படியிருந்தால் யான் எங்கிலையிலிருப்பேனோ?

மகாதேவன்:—அவருக்கு யாதொரு கவலையும் வரக்காரணமில்லை. ஆயினும் இரண்டு நாட்களுக்கு முன்னர் நாமனைவரும் உய்யானத்திற்குப் போயிருந்தபொழுது நீங்களெல்லோரும் விளையாடிக்கொண்டிருந்தீர்கள். அவர் மட்டிலும் பாரிஜாதச்செடியின் கீழ் உட்கார்ந்திருந்தார். நான் அவர் பின்னே அவரறியாதபடி நின்றேன். ஏதோ தனக்குள் தானே சொல்லிக்கொண்டிருந்தனர், சில சொற்கள் மாத்திரம் என் செவியிற்பட்டன.

நந்தீசன்,—என்ன சொற்கள்? கேட்டவாறு சொல்லுக.

மகாதேவன்,—சீவகோடிகள் - படைத்த கடவுள் - கருணை அன்பு - பலி - என்ற சொற்களைச் சொல்லிக்கொள்வார். அன்றியும் வீட்டிலும் என்னென்னவோ யானறியாத சில புத்தகங்களைப் பார்த்தபடியே யிருப்பார்.

நீலகண்டன்,—பள்ளிக்கூடத்தில் புத்தகத்தைப் படிப்பதல்லாமல் வீட்டிலும் படிக்கவேண்டுமோ? வசவேசர்க்கு ஏதாவது பயித்தியமா? வேறென்னை?

மகாதேவன்,—அவர் படிப்பது பள்ளிக்கூடப் புத்தகமல்ல. அவரது தந்தையார் வைத்திருக்கும் புத்தகங்களை யெல்லாம் ஒன்றை எதிர்பார்த்த நோக்கத்துடன் புரட்டுகின்றார். ஆனால் அவருக்கென்ன தெரியும்? ஒன்றுந்தெரியாது. ஆயினும் அவர் வாயினின்றும் 'பலி பலி' என்ற ஒரேமொழி பலமுறை வந்துகொண்டிருக்கின்றது.

சிவன்,—'பலி' என்றால் என்ன?

இப்படிப்பேசிக்கொண்டிருக்கும்பொழுது ஓர் நரைத்த கிழவன் அங்கு வந்தான். அவர்கள் அவனைப் 'பலி' என்றால் என்ன, என்று கேட்டனர். அதற்கு அக்கிழவன் கோழி, ஆடு முதலியவற்றைக்கொண்டுபோய்க் கடவுளுக்குப் பூசை செய்யும்பொழுது கொல்வதுதான் என்றான். அச்சமயத்தில் பசவேசரும் வந்தார். அவர் வரவைக் காணாத கிழவன் முன்னுக்குச் சென்று 'ஆடு கோழி முதலியவைகளைமாத்திரமல்ல, உங்கட்கு பால் வெண்ணெய் முதலிய இனிய பொருள்களைக் கொடுக்கும் பசு எருமை முதலியவற்றையுங் கொல்லுகின்றனர்' என்றான். உடனே நம் பசவேசர் அக்கிழவன் கையைப் பிடித்துத் தம் பக்கம் இழுத்து என்ன? பசுக்களைக் கொல்லுகின்றார்களா? இதென்ன புதுமை! என்ன, அக்கிழவன் ஆம் சுவாமி ஆம் என்று உரைத்துச் சென்றான்.

பசுக்கள் இல்லாவிட்டால் நாம் பிழைப்பதெப்படி? பால், வெண்ணெய், நெய் இல்லையானல் நாம் வளர்வதெங்ஙனம்? பசுக்களை என் தாயார் நாள்தோறும் கடவுளாக எண்ணிப் பூசிக்கின்றாரே. அதி

காலையில் எழுந்திருந்து பசுவின் முகதரிசனம் செய்துகொண்டு அதனை வணங்கி மறுவேலை பார்க்கின்ற வழக்கமுண்டு. அதன் சாணம், நீர் முதலியன மிக்க தூய்மையானதெனக்கருதி சுத்திசெய்ய உபயோகிக்கின்றார்களே. மாடுகள் இல்லையானால் குடியானவர்கள் பயிர்த் தொழில் செய்வதெப்படி? சாமான்களை யேற்றி வண்டிகளை வேண்டிய இடங்கட்கு நடத்துவதெப்படி? மாடுகள் நமக்காக எவ்வளவு வருந்தி உழைக்கின்றன? செய்ந் நன்றி மறந்து அப்பசுக் களைக்கொல்ல எப்படிக் கையெழுகின்றதோ? என்று மீட்டும் நம் பசவேசர் அக்கிழவனைக் கூப்பிட்டுக்கேட்டார்.

அதற்கு அக்கிழவன் என்னதான் சொல்வது? ஆயிரக்கணக் கான பசுக்கள் வதையாகின்றன. மாடுகள் பலமுள்ளதாயிருக்கும் வரையும் வேண்டிய வேலைகளைச் செய்வித்துக்கொண்டு வயது முதிரத்தளர்ந்தபொழுது அவற்றைப் புலையர்க்குக் குறைந்த விலைக்கு விற்றுவிடுகிறார்கள். அவர்கள் அவற்றைக்கொன்று இறைச்சியை விற்று இலாபமடைகின்றார்கள். இன்னும் வைதீகர்கள் எனத் தம்மைப் பெரியாராகக் கருதிக் கொண்டிருக்கும் ஓர் வகுப் பார் யாகம் முதலியன செய்வதாக உலகத்தை மயக்கிப் பெரும் பொருள் செலவிட்டு விலாப்புடைக்கப் பலநாளு ண்டு ஆடு பசு முதலிய பிராணிகளைக் கொன்று அவற்றின் (வபை) இறைச்சியையும் உண்கிறார்கள். அவர்கள் இக் கொலைப்பாதகச் செயல் வேதத்தில் விதித்திருக்கின்றது என்றும் வாய் கூசாது சழறுகின்றனர் என்றான்.

இவற்றையெல்லாம் கேட்ட நம் பசவேசர் முன்னிலும் மனக் கவலை மிக்கவராய் இளமைப் பருவத்தினராயினும் அதுமுதல் ஆராய்ச்சியின் மிக்க அறிவுடையவராய் மதக்கொள்கைகளை ஆராய் வதில் மிக்க ஊக்கமுடையவராய்க் கல்விவான்களிடம் சென்று பல கேள்விகளைக்கேட்டு வருவராயினர். இப்பொழுது அவர்க்கு வயது எட்டாயிற்று.

மாதரசன் என்னும் அவரது தந்தையார் தமது பிராமண வரு ணத்தின் கொள்கைப்படி உபநயனஞ்செய்யவிக்கவேண்டுமெனக்கரு தித் தம் புதல்வர்க்கு ஞாபகப்படுத்தினர் அதற்கு அவர் உடன் பட் டாரில்லை. பின் தாயார் சமானதானஞ்சொல்லினர். அதற்கு இணங்கா தவராகிப்பெற்றோரை நோக்கி, உயிர்க்கொலையைத்தடுக்காத எந்தமதத்

திலும் எனக்கு நம்பிக்கையில்லை. எங்கும் நிறைந்து எல்லா வுயிர்களிடத்தும் கருணை பாலித்துக் காப்பாற்றுங் கடவுளாகிய எமது தந்தையார் தமது குழந்தைகளாகிய உயிர்களை வதைப்பதைக்கண்டு இன்பமடைவாரென்று நான் நம்பவில்லை. 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்ற பழமொழியை அறியாதார் யார்? எல்லாப் பிராணிகளும் நம்மைப்போல் பிறப்பதும் இறப்பதுமாயிருக்கின்றன. நம்மைப்போல் அவைகளுக்கும் உயிரின்மேல் அடங்காத ஆசையுண்டு. குழந்தைகளின்மேல் அளவிறந்த அன்புமுண்டு. பசு தன் கன்றைக் காணவிட்டால் கதறித் திரிந்து அலைந்து வருவதைக் காண்கின்றோம். அப்படிப்பட்ட பசு முதலிய பிராணியையும் அவற்றின் கன்றையும் ஒருவன் எக்காரணத்தை முன்னிட்டாயினுங் கொல்லத் துணிவானாயின் அவன் மனிதனா? அல்லது மறலியா? அவன் மனம் கல்லோ இரும்போ? எப்படிப்பட்டதாயிருக்கலாம்? அவனது குழந்தையை அல்லது தாயைப் பிறர் கொல்லச்சென்றால் அவன் மனந்துணிந்து அமைதியாயிருப்பானா? மனிதன் பசுவினால் பால் வெண்ணெய் முதலிய சத்துள்ள பொருள்களைக்கொண்டு அவற்றிற்குச் சத்தில்லாத வைக்கோல் முதலியவற்றைக் கொடுக்கின்றானே? பின்னர் செய் நன்றி மறந்து அவற்றைக் கொல்லவுந் துணிகின்றானே இப்படிப்பட்ட மனிதனுக்கு முழுமுதற் கடவுள் கருணைசெய்வாரா? அறம் என்பது எங்கே? அன்பு கருணை என்பன என்னவோ? புறங்கூறுதல், பொய் சொல்லல், பிறரை வஞ்சித்தல் முதலியவற்றை நீக்கவேண்டுமெனப் போதிக்கும் மதம் கொலைக்குற்றத்தை மட்டிலும் ஏற்குமா? இது என்ன அநீதி!

பிறந்தபோழுதே எனக்கு இலிங்கதாரணமாயிருப்பதை நீங்கள் மறந்தீர்களா? ஆதலால் உபநயனஞ் செய்யவேண்டுமென்று வற்புறுத்துகிறீர்களா? நீங்கள் வீணாக என்னைத் தொந்தரவு செய்யாதிருங்கள் என்று தந்தையாரைப் பணிந்து பசவேசர் கேட்டுக்கொண்டார்.

இளைஞராகிய குழந்தை சொன்ன மொழிகளைக்கேட்ட தந்தையார் வியப்பும் மகிழ்வுங்கொண்டு அவர் கூறியவையெல்லாம் உண்மையென உணர்ந்தனராயினும் புராதனக் கொள்கையைவிட மனமில்லாதவராய் மீட்டும் உபநயனஞ் செய்விக்கவேண்டுமென்று முயன்று கொண்டிருந்தனர். (தொடரும்)

பெண்பாலர்.

திரு. அ. கந்தசாமி பிள்ளையவர்கள்.
அரசியலார் கல்லூரி தமிழ் விரிவுரையாளர், கும்பகோணம்.
(164-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்னுடாகிய **தமிழ் நாட்டில்** மாதர் கற்பு எவ்வளவு தூய தாயிருந்த தென்பதற்குப் பின்வரும் சரிதம் ஒன்றே போதும்.

திலகவதியார் என்னும் பெண்மணியார் நமது சைவசமயப் பரமாசாரிய மூர்த்திகளான **அப்பர் சுவாமிகளின்** அருந்தவத் தமக்கையார். அவரை ஒருவருக்கு மணம் பேசி நிச்சயித்திருந்தனர். பிறகு சில நாளிலே நிச்சயித்த மாப்பிள்ளை இறந்துபோனுர். திரு மணம் நடக்கவில்லை. மணம் பேசினதுதான் உண்டு.

இந்த நிலையில் பிராணத்தியாகம் செய்துகொள்ளத் துணிந்தார் திலகவதியார். அவர் கருத்து: 'என்னை மணம் பேசின அன்றைக்கே யென்மனம் அவர்பாற் சென்றது. அவரோடு கூடி வாழ்வேன், இல்லறம் நடத்துவேன் என்பது போன்ற எண்ணங்களால் அவரையே நினைத்திருந்தேன். அவரை விரும்பிய மனதினுல் பிறரை விரும்புவதென்ருல் எப்படி? அப்பொழுது எனது கற்பு என்ன ஆகும்' என்பது.

அவர் கூறினது 'இந்த உடலோடும் உயிரோடும் அவருக்குப் பணிவிடை செய்யத் தீர்மானித்தேன். அவ்வாறு செய்வதற்கில்லை. எனினும் அவர் உயிர் போயிருக்கும் உலகத்திலேனும் என்னுயிர் போய் அவருயிர்க்குப் பணிவிடை செய்யக் கடவது' அவர்க்கே உரியவள் நான்; இந்த உயிர் அவருயிரோடு இசைவதாகுக என்பதாம்.

அதுகாலை அவரது திருத்தம்பியார் அச்செயலை விலக்கியதால் அது வொழிந்து **தாபத நிலையாரானுர்**. இதிலிருந்து கற்பின் மகோன்னத நிலை இப்படியினதென்று அறிகிருேம்.

கற்பின் தன்மையைப்பற்றி **வேதநாயகம் பிள்ளை** எழுதிய ஒரு பாடல் நினைவுக்கு வருகிறது.

ஒரு புருஷன் பலவித மனிதத் தோற்றங்களை எழுதிவைத் துள்ள ஒரு சித்திரக் காட்சிசாலையைப் பார்ப்பதற்காகத் தன் மனைவியை யழைத்தான். அப்பொழுது அவள் நான் வரேன்; நீரும் போகப்படாது: ஏனென்றால் அங்குள்ள சித்திரங்கள் ஆண் உருவங் களையோ அல்லது, பெண் உருவங்களையோ காட்டும். நான் சித்திரத் திலும் ஆண் உருவைப்பாரேன்; பெண் உருவைச் சித்திரத்திலும் நீர் பார்க்க நான் சம்மதியேன், என்றனளாம்.

இத்தகைய கற்புடையவர் கல்வியும் உடையவர்களாயிருந்தால் பொன் மலர் மணமும் பெற்றது போலவன்றோ இருக்கும். பெண்களுக்குக் கல்வி கற்பியாமை எவ்வளவு ஓர் மதியீனம். ஒரு கண்ணுக்கு வெண்ணெயும், மறு கண்ணுக்குச் சுண்ணாம்பும் வைக் கிற சில ஆண் மிருகங்கள் ஏதோதோ சில காரணங்கள் கூறிப் பெண் களுக்குக் கல்வி கூடாதென்கின்றனராம். என்னே அவர்களின் அறிவு இருந்த தன்மை! கல்வியிருந்தால் கெட்டுவிடுவாளென்பவர் கண்ணிருந்தால் அயல் ஆண்களைப் பார்த்து விரும்புவாளென்று குருடிகளைக் கல்யாணம் பண்ணிக்கொள்வார்களா?

சாதாரணமாய் நமது தேசத்தில் பெண்கள் படித்தால் புருஷர் களுக்கு அடங்கி நடக்கமாட்டார்களாம். சிறு வயது முதல் பாட சாலைக்குப் போய்வரப் பழகுவதிலிருந்தும் எதேச்சையாய்த் திரிவது வழக்கமாய் விடுமாம். பல நூல்களைப் படிப்பதிலிருந்தும், பலதேசப் பழக்க வழக்கங்களைத் தெரிவதிலிருந்தும் நாணமின்றிப் பிற புருஷர் களுடன் சம்பாஷிப்பது சகஜமாகிவிடுமாம். இங்ஙனம் பல குற்றங் களைக் கற்பித்துக் கொண்டு கல்வியறிவு கொடாமலே மிருகத்தனமாய் குழந்தைகளை வளர்ப்பது பெற்றோர்களுக்கு இயற்கையாய்விட்டது.

பெண்கள் கல்வி யறிவுடையவர்களாயிருந்தால் பலவகையிலும், புருஷர்களுக்கும், தங்களுக்கும், குழந்தைகளுக்கும், உலகத்திற்கும் உபகாரமாயிருப்பவர் இல்லறமும் நல்லறமாய் இனிது நடைபெறும். முதலாவது கணவர்கள் மனக்கவலையாயிருக்கிற காலங்களில் அவர் களுக்கு இதமான வார்த்தைகள் சொல்லியும், அன்பாக நடந்தும் அவர்கள் மனதைக் களிக்கச் செய்வார்கள். தங்கள் குழந்தைகளை நன்றாய்ப் போஷிக்கவும், இளமை முதலே அவர்களுக்குக் கல்விப் பயிற்சி செய்வித்துச் சன்மார்க்க நடை பயிலுமாறு செய்யவும், தம்

கணவருக்கும், வீட்டிலுள்ள குடும்பத்தவருக்கும் அடங்கி நடந்து, தாம் கற்ற நூல்களில் கூறியபடி சன்மார்க்கமாய் ஒழுகியும், கற்பின் தூய்மையை உள்ளபடி யுணர்ந்தும், அதனைக்கைவிடாது நன்கு காப்பாற்றியும் வருவர். அம்மட்டோ? சுகாதார விதிகளை யுணர்ந்து அதிற் கூறியவாறு சிறுவர்களுக்கு அளவுக்கு மீறின உணவுகளையும் அகாலங்களில் சிற்றுண்டிகளையும் கொடுத்து அவர்களைப் பிணியாளர்களாக்கி, நமன் கையில் கொடுக்காமல் காப்பாற்றுவர். சமையல் காரியங்களில் சுசியாயும், ருசியாயும் உணவு சமைப்பர். வியாதிக்குக் காரணமான பண்டங்களை நீக்கித் தேகத்திற்கு ஆரோக்கிய முண்டாகக்கூடிய பதார்த்தங்களைத் தெரிந்து அவைகளைப் பாகம் செய்வர். கணவர், குழந்தை, வீட்டிலுள்ள பெரியோர் முதலானவர்களுக்கு உரிய காலங்களில் உணவு படைப்பர். செல் விருந்தோம்பி வரு விருந்து பார்க்கும் பெருங்குணமுடையராவர். புகுந்த வீட்டிற்கும், பிறந்த வீட்டிற்கும் பெரும்பெயர் சம்பாதித்துக்கொடுப்பர். சில குடும்பங்களிற் பெண்கள் சரியானபடி நடத்தப்படுவதில்லையாம். உடலும் உயிரும், மலரும்மணமும், மணியும் ஒளியும், நகமும் சதையும், பாலும் நீரும், எள்ளும் எண்ணெயும் போல, அந்நியோந்யமாயிருக்கவேண்டியவர் பெண்களும் ஆண்களும். இதை யறியாமற் சிலர் பெண்களை யடிமைகள் போலவும், மிருகங்கள்போலவும் நடத்துகிறார்களாம். இன்னும் சிலர் பெண்கள் குழந்தை பெற்றுக்கொடுக்கும் ஒரு எந்திரம் (மெஷின்) என்றே நினைத்துக்கொண்டிருக்கிறார்களாம்.

ஒரு தமிழ்ச்சங்க வருடோற்சவ காலத்தன்று பிரசங்கிக்க வந்த ஒரு பெண் பிள்ளை தன் முகவுரைப் பிரசங்கமாகப் பின்வருமாறு கூறினள் :—

இந்தச் சங்கத்தில் நிறைந்துள்ள எனது தந்தைமார்களே! சகோதரன்மார்களே! இச்சபையைப்பார்க்க எனக்குப் பெரிதும் நாணமுண்டாகின்றது. ஏனென்றால் ஆண்களாக இவ்வளவு பேர் கூடியுள்ள இந்தச் சபையில் என்னைத் தவிர வேறு பெண்கள் எவரையும் பார்ப்பதற்கில்லாமையால் தான்.

நீங்கள் ஏன் இந்தச் சங்கத்துக்கு உங்கள் பன்னியரையுடனழைத்து வரவில்லை? இந்தச் சபை யோக்கியர்கள் நிறைந்த சபை

தானே. அப்படியாயின் இவர்கள் மத்தியில் உங்கள் மனைவிமார் இருப்பது சரியல்லவென்று நீங்கள் நினைக்க காரணமில்லையே. அல்லது, நீங்கள் இங்குப் பேசும் விஷயங்களெல்லாம் அநாகரிகமும், இடக்கராகவும் உள்ள விஷயமோ அப்படியும் இராதே. ஆயின் பொதுவாக ஆண்மக்கள் போகும் கூட்டங்களுக்குப் பெண்மக்களை யழைத்துக்கொண்டு போவது கெட்ட வழக்கமென்று கருதினீர்கள் போலும்.

'நல்லது, நாடகக்கொட்டகைக்கும், மிருகவேடிக்கை (சர்க்கஸ்) காட்டும் கொட்டகைக்கும் உங்கள் பெண்டிரை நீங்கள் அழைத்துப் போகவில்லையா? அந்த நாடகக் கொட்டகையை விடவா இந்தச் சங்கம் கெட்டதாகிவிட்டது? (இஃது அங்ஙனமின்றி நன்று நின்று நிலாவுக.)

அல்லது, மிருக வேடிக்கைகளில் சற்று நேரம் நிற்பதாகிய நேத்திரானந்தத்தை விளைவிக்க அங்கே அழைத்துச் செல்கின்றீர்கள். இங்கே கற்று நிரம்பிய புலவர்கள் வந்திருக்கின்றனர்; அவர்கள் கற்பனு ரஸம் பொருந்திய பாடல்களைப் பிரசங்கிப்பர். அது கர்ணாமிர்தமாயிருக்கும். இத்தகைய கேள்வியின்பம் சிறந்த ஒரு இன்பமல்லவா! புலவர் கூறும் பிரசங்கங்கள் நல்லொழுக்கங்களைப் புகட்டும்; அவ்வுணர்ச்சி உயிரோடு கலந்து ஏழு பிறப்பு வரையும் தொடருமே. ஆகையால் மிருக வேடிக்கைக்கு அழைத்துச் செல்வதைப் பார்க்கிலும், இச்சபைக்கு அவர்களை அழைத்துவந்தால் ஆயிரமடங்கு நன்மை தருமே! என்பதாம்.

இதனுல் பெண்பாலர் நன்கு நடத்தப்படவேண்டுமென்று கூறினேன்.

இவற்ருல் பெண்பாலர் இத்தகையர்; கற்பு இத்தகையது; பெண் கல்வி, பெண்களை நன்கு மதித்தல் இவற்றின் அவசியம் என்பன அறியப்படும்.

ஸ்ரீமத் பஞ்சாசாரியப்பிரஸீதந்து.

வீரசைவ வைதீகத்துவம்.

வீரமாகேச, S. M. ஆறுமுகாரியர் அவர்கள், வீரசைவப்பிரசாரகர்
(கல்லாற்றூர் மடம்.)

மகாசயரே !

" துர்லபம் மாநுஷம்ஜந்ம க்ரிமிகீட பதங்கேப்ய:
பசவ : ப்ரஜ்ஞ்யா அதிகா : பசுப்யோபிநராஸ்ரேஷ்டா :

பிரமாண்டங்களுள் ஒன்றான இப்பூமண்டலத்திலுள்ள எண்ணரிய பிறவிகளில் மனிதப் பிறவியே கிடைத்தற்கரியதாயும், மனிதனே அறிவிற் சிறந்தவனாயும் இருக்கக் காண்கின்றோம். எல்லாப் பிராணிகளும் பஞ்சபூதத்தினாலாகிய சரீர சம்பந்தமுள்ளவைகளாக இருக்கின்றன. சரீரம் சுகதுக்கானுபவத்திற்கு இடமாக இருக்கின்றது. துக்கத்தை நீக்கிச் சுகத்தை அனுபவிக்கவேண்டுமென்பதே சீவர்களுடைய தருமமாயிருக்கின்றது. சுகம் ஐதிகம், ஆமுஷ்யகம், பாரமார்த்திகம் என மூவகைப்படுகின்றது. விஷயாநுபவத்தினாலுண்டாகும் சுகமே ஐதிகசுகம். யக்ய முதலான கர்மங்களினாலுண்டாகும் சொர்க்க போகங்களே ஆமுஷ்யக சுகம். சிவோபாசனையினாலுண்டாகும் ஆநந்த ரூபமான முத்தியே பாரமார்த்திக சுகம் எனப்படும். மனிதர்க்கே இம்மூவித சுகத்தையும் அனுபவிக்க யோக்கியதையுண்டு. விவேகமே மனிதர்க்கு முக்கிய குணமாகின்றது. " விவேக ஹீந: பசுபிஸ்ஸமாந :" விவேகமில்லாதவன் எருதுக்கொப்பாவன். ஐதீகத்தினும் ஆமுஷ்யகம் சிறந்தது. ஆமுஷ்யகத்தினும் பாரமார்த்திகஞ் சிறந்தது. மனிதர்க்கு ஆமுஷ்யக சுகம் இச்சரீரம் நீங்கின பின்னர் உண்டாவது. பாரமார்த்திக சுகம் இச்சரீரம் உள்ளபொழுதும் நீங்கின பின்னரும் உண்டாவது. ஆமுஷ்யகம் அநித்தியமானது. பாரமார்த்திகம் நித்தியமானது. பாரமார்த்திக சுகத்தில் இச்சையுள்ளவர்களே மக்களுள் சிறந்தவராகின்றார்கள்.

"பரோபகாரார்த்தமிதம் சரீரம்" என்றபடி, எய்தற்கரிய யாக்கை தனக்கெய்தியத் தன் பயனாக இயன்றவரை உலகத்திற்குச் செய்யவேண்டிய உபகாரத்தைச் செய்யவேண்டும். மரம் செடி கொடி முதலான தாவரங்களும் தம்மாலான பரோபகாரத்தைச் செய்கின்றன. மக்களாகப் பிறந்தார் தம்மாலியன்ற பரோபகாரத்தைச் செய்து புகழை நாட்டிப்பிறப்பாலாய பயனையடைதல் கடமையாகும்

தன் வயிற்றை நிரப்புவதில் மாத்திரம் முயற்சியுடையார் தாவரத்தினும் கடைப்பட்டவராவர். குருசேவை சாஸ்திர விசாரணைகளினால் பாரமார்த்திக சுகமாகிய முத்தியடைதல் வேண்டும். இதுவரையும் கூறியவாற்றால் மனிதப் பிறவியே கிடைத்தற்கரியதென்றும், அதனையெய்தும் பயன் இன்னதென்றும் விளங்கும்.

பாரதியரிடத்தில் எத்தனையோ மதங்களிருக்கின்றன. அவற்றுள் சாங்கிய, யோக, பாஞ்சராத்திர, வேத, பாசுபத மென்னும் இந்த ஐந்து மதங்களே பிரமாணங்கள். சாங்கியாதி மதங்களுள் வேதமே முக்கியமானது. வேதத்தை அனுசரிப்பதனால் சாங்கிய முதலான நான்கு மதங்களுக்கும் பிரமாணமுண்டாயிற்று. பாஞ்சராத்திர சாங்கிய யோகமென்னும் மூன்று மதங்களும் வேதத்தில் ஒவ்வோரிடத்தில் மட்டுஞ் சொல்லப்படுகின்றன. பாசுபதமோ வேதத்தில் எவ்விடத்துஞ் சொல்லப்படுகின்றது ; ஆதலால் பாசுபதமென்ற சைவமதம் உயர்வுடையதாயும், வேதங்களெங்கும் விளங்குவதால் வேதத்தைப்போல் பிரமாணத்தைத் தெரிவிக்கிறதாயுமிருக்கிறது. இதே அர்த்தம் ஆகமத்திலுங் காணப்படுகின்றது.

"சாங்கியம் யோக : பாஞ்சராத்ரம் வேதா : பாசுபதம் ததா, ஏதாநிமானபூதாநி நோபஹன்யாநிமுக்திபி: ; வேதப்பிரமாணம் சர்வேஷாம் ஸாங்கியாதி நாம் மஹாமநே, வேதாநுசரணுதேஷாம் ப்ரமாண்யமிதி நிச்சிதம்; பாஞ்சராத்ரஸ்ய சாங்கியஸ்ய யோகஸ்ய சமஹாமுனே, ஸர்வவேதாநுசாரித்வாத்ப்ரமாணம் வேதவத்ஸதா" ஆனால் ஆகமங்களை வேதத்தைப்போல் ப்ரமாணமென்று சொல்லலாமா ? என்று சிலர் வாதிக்கின்றனர். "யோப்ரமாணம் விததாதி பூர்வம் யோவை வேதாம்ச ப்ரஹிணோதி தஸ்மை," "ஈசானஸ்ஸர்வ வித்யானும் காமிகாத்யாத் வாதுலாந்தாச் சிவேநோக்தாச் சிவாகமா :" இந்த ப்ரமாணங்களினால் வேதங்களுக்கும் சைவாகமங்களுக்கும் சிவனொருவனே தலைவனாக இருப்பதனால் வேதத்தைப்போல் சைவாகமும் ப்ரமாணமென்பதில் சந்தேகமில்லை. இவையன்றியும் சூதசங்கிதையில், " அஷ்டாதச புராணு நாம் கர்த்தாஸத்தியவதி ஸுதா : காமிகாதி ப்ரபேதாநாம் யதாதேவோமஹேஸ்வர :" காமிக முதலான சிவாகமங்களுக்கு சிவபெருமான் எப்படிக்

கர்த்தாவோ அப்படிப் பதினெண் புராணங்களுக்கும் வியாசமுனிவர் கர்த்தாவென்று வியாசோக்த புராணங்கட்கு ப்ரமாணத்தைச் சூத முனிவர் சாதிக்கின்றார், "த்ரிபதார்த்தம் சதுஷ்பாதம் மஹாதந்திரம் ஜகத்பதி:, ப்ரோக்தவான் ஹிமவத் பத்ரை தர்மமோக்ஷைக சாதனம்" என்று அதே சூத சங்கிதையில் பசு பதி பாச மென்னும் மூன்று பதார்த்தமுள்ளதாயும், கிரியை, சரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களுள்ளதாயும், தர்ம ப்ரம்ம சாதனமாயும் இருக்கிற மகா தந்திரத்தைச் சிவபெருமான் பார்வதி தேவிக்கு உபதேசித்தாரென்று சொல்வதனால் சிவாகமங்களுக்குத் தர்ம மோக்ஷ சாதனத்துவம் சித்தாந்தஞ் செய்யப்படுகிறது. சிவாகமங்களிற் சில வேத வேதாங்கங்களிற் சொல்லப்படுகிற பதிபாசங்களைத் தெரிவிக்கின்றன. சில சத்தியோஜாத வாமதேவ அகோர தத்புருஷ ஈசானமாகிய பஞ்சப்பிரமங்களைப் பிரதிபாலிக்கின்றன. சில சோதிஷ்டோம முதலான யஜ்ஞங்களுக்கு அங்கமான குண்ட மண்டலங்களின் இலக்கணத்தை விவரிக்கின்றன. சில சிவபூஜா விதானங்களை விளக்குகின்றன. சில சிவாலயங்கட்டுதல் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தல் முதலிய உத்சவக் கிரமங்களைப் போதிக்கின்றன. வேதவேதாங்கங்களில் பசுபதிபாச லக்ஷணங் காணப்படுவதனாலும், முண்டகம் முதலிய உபநிஷத்துகளில் கூறப்படும் சீவப்பிரம ஐக்கியத்தை ஆகமங்கள் சித்தாந்தப்படுத்துவதனாலும், ஷடாக்ஷரம், திரியம்பகம், காயத்திரி முதலிய மந்திரங்களுக்கு கரநியாச அங்கநியாச தியானாதிகள் விதித்திருப்பதனாலும், கௌதம பாரத்வாஜ சௌநகர் முதலான மகரிஷிகள் இலிங்கத்திற்குப் பிரதிஷ்டை முதல் உத்ஸவம் வரையுள்ள கிரமங்களை விவரிக்கிறபடியாலும், யஜுர், அதர்வண, பிரஹத், ஜாபால, காலாக்நிருத்ர, ருத்ராக்ஷ முதலிய உபநிஷத்துகளில் விபூதி, ருத்திராக்ஷ, பஞ்சாக்ஷர, குரு, லிங்க, சங்கம, தீர்த்த, பிரசாதம் என்னும் அஷ்டாவரணங்கள் பிரதிபாதிக்கப்படுவதனாலும், சத்தி யோஜாதாதி பஞ்சப்பிரம மந்திரங்கள் நிரூபிக்கப்படுவதனாலும், "அத்வநாமத்வபதிஸ்ரேஷ்டஸ்ய யாத்வந: பாரமநீயஸீ" என்னுஞ் சுருதிகளிலுள்ள வர்ணம், பதம், மந்திரம், கலை, புவனம், தத்துவம், ஆனஷடங்கங்கள் அறிவிப்பதனாலும், "யாதேருத்ரசிவாதநு" "அகோரபாபகாசினி" "யத்சந்தஸாம் வ்ரஷபோ விஸ்வரூப:" இத்தகைய சுருதிகளில் சொல்லியிருக்கிற சிவலிங்கதாரணத்தை விதித்திருப்பதனாலும், சுருதியும் ஆகமங்களும் ஒரேவிதமான பொருளோடு கூடியிருப்பதனால் சிவாகமங்களுக்கு வைதீகத்துவஞ் சொல்வதில் யாதொரு சந்தேகமுமில்லை. (தொடரும்.)

சிவபூசையின் பெருமையும் இன்றியமையாமையும்.

(ஸ்ரீவிரூபாக்ஷ சாஸ்திரிகள் புராணீக மடம்.)

ஸ்ரீபரமாத்மாவின் பஞ்ச முகத்தினின்றவதரித்த ஜகதாசாரியர்களால் தாபிக்கப்பெற்ற பரமபவித்திரமான வீரசைவ மதத்திற்றோன்றிய ஒவ்வொருவருக்கும் சிவலிங்க பூசையே போக மோக்ஷங்களைத்தரத்தக்கது. வேதோக்தமான சகல கர்மங்களினும் சிவபூசையே சிறந்தது. வேள்வி முதலியவற்றைச் செய்வதனுல் சுவர்க்காதிபோகங்களை அனுபவித்துத் திரும்பவும் பிறவிப் பிணிக்கே வரவேண்டியதாகின்றது. சிவபூஜை வடிவமான கர்மம் இம்மையில் சுகத்தைக் கொடுத்து முடிவில் பிறப்பற்ற நித்திய முத்தியைக்கொடுக்கின்றது. இதனுல் சிவபூஜையே போகமோக்ஷங்களைக் கொடுக்கவல்லதென ஏற்படுகின்றது. முற்காலத்தில் விஷ்ணுவாதி தேவர்களும், இராவணுதி அரக்க வீரர்களும், கலைமகள், திருமகள் முதலிய தேவியரும் சிவ பூசையைச் செய்தே தாம் வேண்டிய பொருள்களைப்பெற்றுப் பெரியராயினர்.

அதனுல் ஒவ்வொரு வீரசைவரும் சிவதீக்ஷாசம்பன்னராகி ஸ்ரீகுருவினுல் கொடுத்தருளப் பெற்ற இஷ்ட லிங்கத்தைத் தரித்துக்கொண்டது முதல் "பக்த்யை வைகமநாபூத்வா யாவஜ்ஜீவம் ப்ரதிஜ்ஞயா, அர்ச்சயேத்தம் மகாதேவ மாபன்னேபி ஸதாபுத :" என்ற விதிப்படி தன் சீவனிருக்கிறவரையும் தவருமல் சிவபூஜையைச் செய்தல்வேண்டும் " ஸ்ரேயாம் ஸிபஹு—விக் நானி " என்றபடி நல்வினைக்கும் நல்ல விரதங்கட்கும் பல இடையூறுகள் வருவது இயற்கை. ஆயினும் மகாசிவபூஜா விரதத்தை விடலாகாது. சில மந்த மதிகள் கால வேறுபாட்டால் ஏதேனும் இடையூறு நேர்ந்தால் உறுதியின்றி மனவலிகுன்றி விரதப் பிரஷ்டனுகி சிவபூஜாதி விரதங்களை விடவேண்டுமென்றும், அதனுல் பயனில்லையென்றும் தூர்ப்போதனை செய்வார்கள். இவர்களது துன்மதி யிருந்தவாறென்னே! இவர்கள் சிவபூசையைச் செய்தவுடன் கைமேற் பலனில்லையே என்கின்றனர். பூமியில் விதையை நாட்டியவுடன் பலனைத் தருகின்றதா?

பாலைக் கறந்தவுடன் நெய்யைத் தருகின்றதா? இவைகட்கு எப்படிக் காலக்கழிவு ஏற்படுகின்றதோ அப்படியே அநேக காலம் தூய்மையான பக்தியினாலும் மனவுறுதியினாலும் சிவபூஜா விரதத்தை நடத்திக் கொண்டு வந்தால் சிவபெருமான் முடிவில் திருப்தியுடையராய் அருள் பாலிப்பர்.

அதனால் சிவாசாரசம்பன்னன் "ஸ்நாத்வாத்விவாரம் சிவமர்ச்சயிஷ்யங், புஞ்சீதநோச்சீன்நரகம் பிரயாதி" நாள்தோறும் இரண்டு முறையாவது நீராடி சிவபூசையை முடித்த பின்னரே பிரசாதத்தை ஏற்கவேண்டும்; அப்படியின்றிப் பசியில் ஞாபகமுள்ளவனாகிச் சிவபூசையின்றி வயிற்றை வளர்ப்பானாயின் அவன் நரகத்தில் விழுபவனாவான். எவன் சிவலிங்க பூசையின்றி உண்கின்றானோ அவன் புழுக்களை உண்டவனாகின்றான். வீரசைவர்களினால் ஆண்களாயினும் பெண்களாயினும் சிவபூசையின்றி உண்பார்களாயின் அவர்கள் மறுமையில் சண்டாளராகப் பிறப்பது உண்மை. ஆதலால் ஒவ்வொருவரும் உண்மைப் பக்தியினாலும், சாந்த சித்தத்தினாலும் நல்வழியில் தேடிய பொருளினாலும் சிவபூசைச் செய்தே தீரவேண்டும். சிவபூசைக்குப் பணக்காரனாயிருக்க வேண்டுமென்பதில்லை. நீண்ட நேரம் வேண்டுமென்பதில்லை. பக்திக்கே பரமசிவன் திருப்தியடைகின்றார். வேண்டிய பலனையுந் தருகின்றார்.

சிவபூசையே அனைத்தினும் மேலானதென்பதற்குப் பிரமாணம் வீரசைவ சமயாசாரப் பிரதீபிகையில் "அக்நிகோத்ரா ஸ்ச வேதாஸ்ச யஜ்ஞாஸ்ச பகுதக்ஷிணா: சிவலிங்கார்ச்சநஸ்யை தேதோர்க்கியம் சேனுபிநோசமா:" வேள்வி அக்நிஹோத்ரம் முதலியவற்றின் பலனும், ஆயிரம் சாந்திராயண விரதத்தின் பலனும்' கோடி கோதானங்களின் பலனும், நூறு கோடி வேள்விகளின் பலனும் சிவ்பூசையின் கோடியில் ஒன்றிற்குச் சமானமாகா. சிவலிங்க மூர்த்தியை எவன் பூசிக்கின்றானோ அவற்குக் கல்வி, செல்வ முதலிய அனைத்தும் உண்டாக முடிவில் முத்தி ராஜ்பமும் உண்டாகின்றதென வியாசர் முதலிய முனிவரும் கொண்டாடுகின்றனர்.

வீரசைவர்கள் நித்திய பூசை செய்வதுடன் சிவராத்திரி, பிரதோஷம் முதலிய விசேஷ தினங்களில் நைமித்திக பூசையும் செய்தல்

வேண்டும். நாள்தோறும் முறைப்படி நீராடி இஷ்டலிங்க பூசை செய்து அர்ப்பிதமான பிரசாதத்தையன்றி மற்றொன்றை யுண்ணாத விரதியாகிய வீரசைவர்க்கு யாதொரு பிணியும் அணுகாது என்பது அனுபவத்திலும் கண்டறிந்ததே. ஆதலால் ஒவ்வொரு வீரசைவர்களும் எவ்வகைத் தொழின் முறையிலிருப்பினும் தம்மக்களாகிய **ஆண் பெண்பாலர் இருவர்க்கும்** உரிய காலத்தே தீக்ஷை செய்வித்து சிவலிங்க பூசையைச் செய்யும்படி முயற்சித்து குருலிங்க சங்கம பக்தியுடையவர்களாக வேண்டுமென வேண்டுகின்றோம்.

வேடிக்கைத் துணுக்குகள்.

பள்ளிக்கூடம்.

I

பாலர் வகுப்பு.

டிப்டி இன்ஸ்பெக்டர்,—அடே! பையா! இதோ கறுப்புப் பலகையில் எழுதியுள்ள எழுத்துக்களைக் கூட்டிப் படி.

(க — ழு — தை)

பையன்,—கழுதை.

டிப்டி இன்ஸ்,—சரி, நீ கழுதையைப் பார்த்திருக்கிறாயா?

பையன்,—ஊம்.

டிப்டி இன்ஸ்,—அடே! கழுதை எப்படியிருக்கும்?

பையன்,—மௌனம்

டிப்டி இன்ஸ்.,—அடே! அது எதைப்போலிருக்கும்? இதோ இந்த நாற்காலியைப் போலிருக்குமா?

பையன்,—தலையை ஆட்டுகிறான். (அல்லவென்று)

டிப்டி இன்ஸ்.,—(பின்னை, இந்தப் புத்தகத்தைப் போலிருக்குமா? இந்தக் கறுப்புப்பலகையைப் போலிருக்குமா? இந்தப் பேனாவைப் போலிருக்குமா? சீமைச் சுண்ணாம்பைப் போலிருக்குமா? என்று அங்குள்ள ஒவ்வொரு பொருளையும் காட்டிக் காட்டி அவன் வாயினின்றே விடை வருவிக்கவேண்டுமென்று, கடைசியாக) அடே! அந்தக் கழுதை என்னைப் போலிருக்குமா? சொல். (தமது மார்பைத் தட்டிக் காட்டிக் கேட்கிறார்.)

பையன்,—(அவர் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் சளைத்துப்போய் அல்ல, அல்லவென்று தலையாட்டுவதைவிட்டு, இதற்கேனும் ஆம் என்று சொல்லுவோமெனத் தலையை யசைத்துக்கொண்டு) ஊம் என்கிறான்.

II

ஆறும் வகுப்பு (First Form)

உபாத்தியாயர்,—(வகுப்பு மாணவர்களின் பாடபுத்தகத்திலுள்ள **பாண்டவரும் – கௌரவரும்** என்ற பாடத்தைப் படித்துக் காட்டி) மாணவர்காள்! இந்தக் கதையைப் படிக்கக் கேட்டீர்கள். இதிலிருந்து நாம் அறிந்துகொள்ளும் நீதியாது? தெரியுமா? பொறுத்தவர் பூமியாள்வார் பொங்கினார்————? சொல்லுமின்.

மாணவரில் ஒருவன்,—தெரியவில்லை.

உபாத்தியாயர்,—தெரியவில்லையா? (அடுத்த பையனைப் பார்த்து) பொங்கினார்————?

மாணவர்,—ஒருவருக்கும் தெரியவில்லை

கடைசியாக ஒரு மாணவன்,-சார் நேக்குத்தெரியும். சொல்லூட்டுமா?

உபாத்தியாயர்,—சொல். தெரிந்தால் சொல்லேன். பொங்கினார்——?

மாணவன்,—**பொங்கினார் சாப்பிடுவார்.**

III

மேல் வகுப்பு.

உபாத்தியாயர்,—(ஒரு பிரம்பைக் கையிலெடுத்து அதன் ஒரு நுனியைத்தம் கையிற் பற்றிக்கொண்டு, மற்றொரு நுனியால் ஒரு மாணவரைச்சுட்டி) அடே! இந்தப் பிரம்பின் நுனியால் சுட்டிக் காட்டப்படும் முட்டாள் யார்? தெரியுமா?

மாணவர்,—எந்த நுனியால்?

(உபாத்தியாயர் தலை குனிகிறார்.)

IV

மேல் வகுப்பு.

உபாத்தியாயர்,—(ஒருவரும் பாடங்களைச் செவ்வனே படித்துவரமாட்டேனென்கிறீர்கள் என்று முறுமுறுத்துக்கொண்டு) உங்களுக்கெல்லாம் யாரடா பிரமோஷன் கொடுத்தது?

மாணவர்,—ஐயாவே! தங்கட்கு அப்பாயின்ட்மெண்டு (வேலை) கொடுத்த சாக்ஷாத் அந்த ஹெட்மாஸ்டரே.

இங்ஙனம், அ. கந்தசாமி பிள்ளை.

வீரசைவர்களின் முன்னேற்ற வழிகள்.

(திரு. P. கல்யாண வீரையர் அவர்கள், கானக்கிளியனூர்.)

ஐயன்மீர் ! படைப்பு அப்பிராகிருதம், பிராகிருதம் என இரு வகைப்படும். எல்லாம் வல்ல இறைவராகிய சதாசிவமூர்த்தி ஆதியில் பிரமதேவனுக்குப் படைப்புத் தொழிலைக் கற்பிக்கும்பொழுது தாமே காட்டிய படைப்பு அப்பிராகிருத படைப்பு. அதிற்றோன்றியவர்களே வீரசைவர்கள். பிரமனால் படைக்கப்பட்டதே பிராகிருத படைப்பு; அதிற்றோன்றியவர்களே பிராமணாதியோர் என்பர். வீரசைவர்கள் தோற்றத்தினும் உயர்ந்தவர்களாயிருந்தும் 'மூத்தது மோளை இளையது காளை' என்ற பழமொழிக்கிணங்க இடையில் தோன்றிக் குடிப் புகுந்து வருணாச்சிரம பேதங்காட்டி மயக்கிய ஒரு சிலரால் நசுக் குண்டு இலைமறை காய்போல் வாழலாயினர்; எனினும் தம் ஒழுக்க நெறியினும் கொள்கையினும் இக்காலத்தினும் குறையாது விரத முடையராயிருக்கின்றனர். இவர்கள் வடநாட்டில் பெருஞ்செல்வ ராயும், பெருங் கூட்டத்தினராயும், செல்வாக்கில் மிக்கவராயும் விளங்குகின்றனர். வீரசைவ பீடாதிபதிகளும் நிகரற்றவர்களாயிருக் கின்றார்கள். வீரசைவர்களின் பெருமை அந்நாட்டில் பரந்து காண் பதுடன் வேதாகம உத்தர பாகங்களினும் சிறந்து விளங்குகின்றது.

இத்தமிழ் நாட்டில் சிலவந்தர்களாகிற வீரசைவர்கள் தனித்தனிச் சிதறுண்டிருப்பினும் பலவருணத்தார்க்குக் குலகுருவாயும், மடாதி பதிகளாயுமிருந்து வருகின்றனர். கும்பகோணம் ஸ்ரீசாரங்கதேவ சிவாசாரியர் மடாலயத்தின் சீடர்களாகிய பக்தர்கள் பல்லாயிரக்கணக் காய்த் தமிழ் நாடெங்கும் பரவியிருந்தும் எக்காரணத்தினாலோ தம் ஒழுக்க வழக்கங்களை விட்டுச்சிவலிங்கதாரணமின்றியும், சிலர் ஸ்ரீபஞ் சாக்ஷரவுபதேசமில்லாத போலிப் புரோகிதர்களைக்கொண்டு சிராத்த முதலியவைகளைச் செய்தும் வருகின்றனர் எனக்கேட்க நமது சமயப் பிரசாரம் எவ்வளவு பின்னடைந்திருக்கிறதெனத் தெரியவருகின்றது! நமது வீரசைவ மாகேஸ்வரர்கள் ஆங்காங்குச் சென்று வீரசைவப்பிர சாரஞ் செய்யவேண்டியது அவசியமல்லவா ? சமயவுண்மையறியாத சிலர் தம்மைத் தாமே மதித்துப் பிறரைக் குறைகூறுகின்றனர்.

"சங்கமந்தனக்கொரு சாதியுன்னினன் அங்கலிங்கத்திற்கும் அஃதையுன்னினன்" என்பதாதிய உண்மையுரைகளை மேற்கொள்ள வேண்டாமா? கொள்ளல் கொடுத்தலாகிய அகச்செயல்கள் கோத்திர சூத்திர முறைப்படி வழக்கம்போல் செய்து கொள்ளவேண்டிய தவசியமே. எனினும், தமது சமயாரப்பிரசாரம் செய்வதற்குப் பலரும் பெருங் கூட்டமாகக்கூடி அதற்கான தீர்மானங்களைச் செய்தல் வேண்டாமா?

இத்தமிழ் நாட்டில் நாம் கொண்டுள்ள குறுகிய நோக்கங்களால் ஆத்தூர் தாலூகாவிலுள்ளோரைத் தஞ்சாவூர் தாலூகாவிலுள்ளோர் அறியாமலும், வடார்க்காடு சில்லாவிலுள்ளோரைச் திருச்சி ஜில்லாவிலுள்ளோர் அறியாமலும் இருக்கின்றோம் நம்முன்னோர் தாம் பல நூற்றாண்டுகட்கு முன்னமேயே உண்மைச் சுயமரியாதையை உலகில் நிலைநாட்டியவர். பிறதெய்வவணக்கம்வேண்டா. ஆலயம்புக்குப் பிறர்பால் அவதியுறவேண்டா. பிறருணவைக் கனவிலும் கொள்ளக் கருதவேண்டா. இஷ்டலிங்க பூசையின்றி எதையும் பிறர்பாலுண்ண வேண்டா. என்பனவாதிய நீரைப் பாய்ச்சி அவ்வித்தை முளைத்து விளையச்செய்தனர். இவற்றையறியாதார் பவிகளிடஞ் சென்று திருநீறு வாங்கவுந் துணிகின்றனரே! சமயக்கொள்கைக்கு மாறான கருமங்களைச் செய்து தானப் பொருள்களையும் வாங்கத்துணிகின்றனரே! தம் உழைப்பினுல் பெறும் பொருள் சிறிதாயினும் அதுவே இன்பத்தைத் தருவது; ஆதலால் இத்தமிழ் நாட்டிலுள்ள வீரசைவர்கள் இனி ஆராய்ச்சியின்றிய பிடிவாதத்தை விடுத்து உழவு, கைத்தொழில், உத்தியோக முதலியவற்றில் முன்னேறிச் சமுகமுன்னேற்றத்திற்குச் சாதகமான செல்வப் பொருள் சம்பாதித்தல் முதலியவற்றில் முன்வர வேண்டுமெனவும், அது சம்பந்தமாகப் பலமுறை கூட்டங்கூட்டி ஆராய்ச்சிசெய்யவேண்டுமெனவும் சமூகப்பெரியாரை வேண்டுகின்றேன். (தொடரும்.)

தமிழ் நாட்டு நிகழ்ச்சிகள்.

இலங்கைத் தீவில் வீரசைவம்.

இற்றைக்குச் சற்றேறக்குறைய அரை நூற்றாண்டுக்கு முன்னர் வரை இலங்கைத் தீவின் வடபாகத்தில் வசித்துவந்த வீரசைவ மக்கள் பல்வேறுபட்ட தொழில்களையுடையராய்த் தங்கள் முன்னோர்களுக்

குரிய ஆசாரவொழுக்கங்களையும், அனுட்டானங்களையும் கைப்பற்றி முறை பிறழாது மாண்புடையராய் வாழ்ந்திருந்தனர். அப்பொழுது மிக்க கலைவல்லுநரும், சாந்த சீலரும் ஸ்ரீபஞ்சாசாரிய பக்தியிற் சிறந்தவருமான ‘ அருணகிரியார் ’ என்னும் பெரியார் இங்குள்ளார்க்குக் குருவாய் வீற்றிருந்து யாழ்ப்பாணத்தில் வீரசைவ சமயத்தை நிலை நாட்டினர். இவர் சோழ நாட்டின் கும்பகோணம் வீரசைவ பெரிய மடம் ஸ்ரீசாரங்கதேவ தேசிகேந்திர சுவாமிகளை யடுத்து இலிங்க தாரண தீக்ஷையையும் ஆசாரிய அபிடேகத்தையும் பெற்று யாழ்ப்பாணம் வந்து இங்குள்ள வீரசைவர்கட்கு தீக்ஷை முதலியன செய்வித்து வீரசைவப் பிரசாரஞ்செய்து பிற்காலத்தவரும் பரம்பரையாகக் குரு சந்நிதானமாக விளங்கிவரும்படி அருள் செய்து சிவலிங்கைக்கியமாயினர்.

ஸ்ரீ அருணகிரிதேசிக சுவாமிகளின் பிரபௌத்திரரான ஸ்ரீநாக முத்துதேசிகரும் கல்வி முதலியவற்றிற் சிறப்புடையராய் வாழுங் காலத்து, சைவ சித்தாந்தப் பிரசாரகர் ஸ்ரீஆறுமுக நாவலர் அவர்களின் பேதவுணர்ச்சியால் சில மாறுதல்களுண்டாயின. அவ்வரலாற்றைப் பின்னர் எழுதிவருவேன் என யாழ்ப்பாணம் திருவாளர் நா. சி. கைலாசதேசிகர் என்னும் அபிமானமிக்கார் அறிவிக்கின்றார்.

சைவ சித்தாந்த மடாதிபதிகளின் புறப்பாட்டு வைபவம்.

(திரிசிரபுரம்)

தமிழ் நாட்டின்கண் சிறப்புற்று விளங்கும் தருமபுரம் ஆதீனம் ஸ்ரீமத் பண்டார சந்நதி சுவர்மிகள் 3—7—1929-ல் சிஷ்யகோடிகளும், பக்தர்களும் புடைசூழ்ந்துவர எண்ணிறந்த பிருதுகளுடன் வாச்சியங்கள்முழங்க, பொன்மயமாக விளங்கிய பல்லக்கில் ஆரோகணித்து ஆண்டார் வீதியை அலங்கரித்துப் பவனிவந்தருளினார்கள். திரிசிரபுரம் ஜில்லா போர்டு தலைவர் திருவாளர் T. M. நாராயணசாமி பிள்ளை M., A., B.L. M.L.C., அவர்களும், லால்குடி தேவஸ்தானக் கமிட்டித் தலைவர் திருவாளர் L. N. பரமசிவம் பிள்ளையவர்களும் பெரும்பொருட் செலவில் இத்திருவிழாவைச் சிறப்புற நடத்திவைத்தார்கள். அன்னார் பக்தியும் முயற்சியும் பெருகுக. இதுவே சைவப் பெரியார் செய்யவேண்டிய இக்காலத்திற்குரிய கடமை என இத்தமிழ்நாடு பாராட்டுகின்றது. மேற்படி சுவாமிகள் திருச்செந்தூர் யாத்திரையாக உலாவி வருகின்றார்கள். நன்கு நிறைவேறுக. சுபம்.

ஓகைமலி குருவாணை யுறுவிக்கு மாணையு
முயர்புரா தனசரிதமோ
டொக்குநடை வருவிக்கு முவமையுந் தன்மகனை
யொண்சுவத் திகமேற்றபு
சோகமற மனுமயஞ் செய்தமைத் திடுமொரு
சுவத்திகா ரோகணமுநூல்
சொல்லிய விடங்களிற் றூயநீ றணிதருந்
தொல்விபூ திப்பட்டமும்
மாகலச நீராட்டு கலசாபி டேகமு
மருவுசிவ நோக்குவிக்கும்
வயங்குலிங் காயதமு மன்னுசிவ லிங்கமுரு
வனைசுவா யதமுமெனுமே
ழாகுநெறி தான்மருவி யாசமிசை யிலகுமர
னபிடேக மாடியருளே
யறிவுற்றெ னங்கைமலர் சேறிவுற்ற மர்ந்தவிறை
யபிடேக மாடியருளே.

(இ - ள்.) ஓகைமலிகுரு — (முன்னரே இலிங்கதாரணஞ் செய்யப்பெற்று சாமானியம் விசேடம் நிராபாரம் என்னும் மூவகை தீக்ஷையையும் பெறுதற்குரியவரான வீரசைவர்க்கு வேத மந்திர கிரியா தீக்ஷையைச் செய்தபின்) மகிழ்ச்சிமிகும் ஆசாரியர்,— ஆணை உறுவிக்கும் - (தம்மகனுகிய சீடனுக்குத்) தமதாணையை அடையச் செய்வித்தலாகிய,— ஆணையும் - ஆக்கினு தீக்ஷயும்,— உயர்புராதன சரிதமோடு - உயர்ந்த பழமையான சரித்திரத்துடன்,— ஒக்கும் நடை வருவிக்கும் - ஒத்த சமயாசார ஒழுக்கங்களைப் போதிக்கும்,— உவமையும் - உபமாதீக்ஷயும்,— தன் மகனை - தமதுமகனுகிய சீடனை,— ஒண்சுவத்திகம் ஏற்றபு - ஒளிபொருந்திய சுவஸ்திகாசனத்தில் ஏற்றி,— சோகம் அறும் - சோகமற்ற,— மனுமயஞ் செய்தமைத்திடும்- மந்திர ரூபமாகச் செய்து இருக்கச் செய்யும்,— ஒரு சுவத்திகாரோகணமும் - ஒப்பற்ற சுவத்திகாரோகண தீக்ஷயும், — நூல் சொல்லிய இடங்களில் - (சித்தாந்த சிகாமணி முதலிய) நூல்களிற் சொல்லப்பட்டபதினைந்திடங்களில்,— தூயநீறு அணிதரும் - தூய்மையான திருநீற்றை அணிவித்தருளும்,— தொல்விபூதிப் பட்டமும் - பழமை

யான விபூதிப்பட்ட தீக்ஷையும்,—மாகலச நீராட்டு - பெருமை வாய்ந்த ஸ்ரீபஞ்சாசாரிய கலசோதகத்தால் அபிஷேகஞ்செய்விக்கும்,—கலசாபிடேகமும் - கலசாபிடேக தீக்ஷையும்,—மருவு சிவம் நோக்குவிக்கும் — (ஆசாரியர் தமது கரத்தில்) எழுந்தருளியிருக்கும் சிவலிங்கத்தைச் சீடனுக்குத் தரிசிப்பித்தலாகிய,—வயங்குலிங்காயதமும் - விளங்கும் இலிங்காயத தீக்ஷையும்,—மன்னு சிவலிங்கம் - (ஆசாரியர் தமது கரத்தில்) பொருந்தியிருக்கும் சிவலிங்கத்தை,— உருவனை சுவாயதமும் - (சீடனது சிரம் முதலிய வுத்தம) உருவத்தில் தரிப்பித்தலாகிய இலிங்க சுவாயத தீக்ஷையும்,—எனும் ஏழாகும் நெறி தான் மருவி - என்று சொல்லப்படும் ஏழாகிய தீக்ஷா நெறியைப் பொருந்தி,—ஆகமிசை இலகும் அரன் - தேகத்தின்கண் இஷ்டலிங்க மூர்த்தியாக விளங்கும் அரனே! அபிடேகம் ஆடியருள் - அபிடேகத்தை ஏற்றுக்கொண்டருளும் என்றபடி. 'அறிவுற்று......ஆடியருள்' இதற்கு முன்னருரைத்தாங்குரைக்க.

வீரசைவதீக்ஷை இஷ்டலிங்கதீக்ஷை, பிராணலிங்கதீக்ஷை, பாவலிங்கதீக்ஷையென மூவகைப்படும். இம்மூன்றும் முறையே வீரசாமானியர்க்குத் தூல தேகத்தின் கண்ணும், வீரவிசேடருக்குச் சூக்கும தேகத்தின் கண்ணும், வீரநிராபாரருக்குக் காரண சரீரத்தின் கண்ணும் செய்யப் பெறுவன. இவற்றின் விரிவனைத்தையும் வீரசைவ சின்மய தீக்ஷாவிதியிற் காண்க.

இந்நூலாசிரியர் சின்மய தீக்ஷா விதியை இத்திருவிருத்த முதல் மூன்று விருத்தங்களால் மூவேழாக வுரைப்பக்கருதி இத்திருவிருத்தத்துள் தேகாபிமான தீக்ஷையேழும் உரைக்கின்றார். தூலதேகத்தின்கண் செய்யப்பெறும் இஷ்டலிங்க தீக்ஷை ஆக்கினை, உவமை, காயாரோகணம், விபூதிப்பட்டம், கலசாபிடேகம், இலிங்காயதம், இலிங்கசுவாயதம் என எழுவகைப்படும். அவற்றுள், ஆஜ்ஞா தீக்ஷையாவது,—ஆசாரியரானவர் முன்னரே இலிங்கதாரணஞ் செய்யப்பெற்றுள்ள சீடனை அருகழைத்து உன் கரத்திற் கொடுக்கப் பெறும் சிவலிங்கமே பிராணலிங்கம்; தத்துவாதீதமான பரஞ்சோதி வடிவமானது. இதனைக் கணப்பொழுதாயினும் உனது தேகத்தினின்றும் பிரியாமலிரு. திரிகாலங்களிலும் நீராடி விதிப்படி பூசை செய். இலிங்கார்ப்பித மல்லாத எதையும் கொள்ளாதொழிக. போக மோக்ஷங்களனைத்தும் உன் கரத்தில் வந்துள்ளனவாக நம்புக. துன்

பங்களனைத்தையும் ஒழிக. இனி சத்த (ஏழு) பாதகமாகிய ೦ பவி பாகம், பவிசங்கமம், பரதெய்வம், பரதிரவியம், பரதாரம், கொலை, களவு, கள்ளுண்டல் என்னும் ஏழையும் கனவிலும் கருதற்க. சென்ன சூதகம், மரணசூதகம், சாதி சூதகம், மாதசூதகம், உச்சிட்ட சூத்கம் என்னும் பஞ்ச சூதகத்தையும் விட்டொழிக. என்றிப்படிக் கட்டளையிட்டுத் தமதாணையின்படி நிற்கச் செய்தல்.

உபமாதீக்ஷையாவது,—ஸ்ரீ இரேணுகாதி புராதன கணர்களும் ஸ்ரீபசவாதி பிரமத கணர்களும் ஒழுகிய வீரசைவ சமயாசாரங்களைச் சரித்திரவாயிலாக எடுத்துக்காட்டி 'அவற்றோடு ஒப்பநடப்பாயாக' வெனக் கட்டளையிடல். ஏனைய ஐந்தும் காட்சி வகையான் அறியற்பாலன.

பஞ்ச சூதக விசாரம்:—வீரசைவர்களுக்குப் பஞ்ச சூதகம் உண்டெனவும், இல்லையெனவுங் கூறும் வாதம் நிகழ்ச்சியிலுள்ளது. சமய வுண்மையை ஆராயாத வீரசைவரிற் சிலர் தமது அசதியால் தவறு நேர்ந்தபொழுதெல்லாம் வீரசைவர்க்குப் பஞ்ச சூதகமில்லை என இலகுவில் விடை கூறிவிடுகின்றனர். இவ்வுயர்ந்த சமயத்தில் அழுக்காறற்ற தங்கலப்பிரியரான வேறு சிலரும் வீரசைவர்க்குப் பஞ்சசூதகமில்லையாதலின் அச்சமயம் அவைதிகமுடையதெனப் பிறர் புறக்கணிக்கும் வழியிற் கழறி யொழிகின்றனர். இந்நிலையில் ஆக்கினாதீக்ஷையில் 'பஞ்ச சூதகத்தை விடுக' எனப் பழைய வுரையிற் காணப்பெறுவதை ஈண்டு ஆராயாமல் விடுதற்கில்லை.

ஸ்ரீமத் பஞ்சாசாரிய சாம்பிரதாயகரான **ஸ்ரீகரபாஷியகாரர்** பாஷிய கிரந்தத்தில் "சைவம் தேவதார்ச்சனம்யஸ்ய, யஸ்யசாக்நிபரிக்ரஹ:, ப்ரம்மசாரியதீநாஞ்ச சரீரே நாஸ்தி சூதகம், லிங்கார்ச்சனரதா நாரிசூதகீவா ரஜஸ்வலா, ரவிரக்நிர் யதாவாயுஸ் ததாகோடிகுணோஜ்வலா" சிவலிங்க பூசை செய்பவர், அக்நிஹோத்ரஞ் செய்பவர், பிரமசாரி விரதத்தை யனுட்டிப்பவர், யதிகளாயுள்ளவர் எவரோ அவரது சரீரத்தில் யாதொரு சூதகமுமில்லை. சிவலிங்க பூஜாவிரதியான பெண்பாலர் ரஜஸ்வலை (மாதசூதகம்) யுடையராயிருப்பினும், மற்றவர் ஏனைய சூதகங்களையுடையராயினும் அவர் எவ்விடத்தும் வியாபித்திருக்கும் சூரியன், அக்நி, வாயுக்கள் எப்படித் தூய்மையுடையனவாகின்றனவோ அவற்றினுந் தூய்மையுடையராகின்றனர். மாத

೦ பவிபாகம்,—வீரசைவரல்லாத மற்றவரால் பாகஞ் செய்யப்படும் உணவு.

சூதகத்தையுற்ற காலத்தினும் நீராடுதல் முதலியவற்றால் தூய்மையுடையராயிருந்து நித்தியலிங்கார்ச்சனையை விடாது செய்தல்வேண்டும் என்று **சித்தாந்த சிகாமணி, பராசரஸ்மிருதிப்** பிரமாணங்களினால் உதாகரித்து, இலிங்கதாரிகளுக்குப் பஞ்ச சூதகமில்லை யென்பதனால் ரஜஸ்வலையான பெண்பாலரால் செய்யப்படும் பாகமும் ஏற்றுக்கொள்ளப்படுமோ எனின் அற்றன்று. அங்ஙனங்கொள்ளின் சிவலிங்கார்ச்சனையில் மாத்திரம் சூதகங்களில்லையெனக் கூறும் சிவாகமங்களுக்கே விரோதமாகும். அன்றியும் வைதிகருக்கே இலிங்கதாரணம் தக்கதன்றென்வும் ஏற்படும்; ஆதலின் ஆகமங்களின் விதிவிலக்குகளைப் பூர்வோத்தர பாகங்களைத்தழுவி இடமறிந்து கொள்ளுதல்வேண்டும்.

> "ஸ்வேஷ்டலிங்கைக பூஜாயாம் சைவாசௌசம் விதீயதே,
> பௌண்டரீகேரஜஸ்த்ரீணும் ஸ்வாக்நிஹோத்ரேயதாததா.
> அகரஸ்பர்ஸயோக்யாபி யதாஜிஹ்வா மஹேஸ்வரி,
> மந்த்ரோச்சாரணமாத்ரஸ்ய பூதாபவதி பூதலே.
> ததாசூதகினர் சைவா : பூஜாமாத்ரசுநிர்மல :
> நாஸ்யஸ்பர்ஸாநுகூலா : ஸ்ருதிர்வேதாநுசாசனம்."

பௌண்டரீயாகத்தில் யஜ்ஞத்தைச் செய்யும் யஜமானன் மனைவியும், அக்னிஹோத்ரஞ் செய்பவன் மனைவியும் ரஜஸ்வலையானாலும் அங்கு எப்படி ஆசௌசமின்மை விதிக்கப்பட்டுள்ளதோ அப்படியே இலிங்காங்கியாகிய பெண்ணுக்கு சிவலிங்க பூசையில் மாத்திரம் ஆசௌசமின்மை விதிக்கப்பெற்றுள்ளது. "பார்வதியே! நாவானது கரத்தால் தொடுதற்கும், மந்திரோச்சாரணத்திற்கு மாத்திரம் தூய்மையாகின்றதோ அப்படியே சூதகமான வீரசைவப் பெண்கள் தமது இஷ்டலிங்க பூசைக்கு மாத்திரம் உரியவரேயன்றி ஏனைய பாகஞ் செய்தல் முதலியவற்றிற்கு உரியவராகார். இஃது வேதாநுசாசனமென்றறிக; என்று சித்தாந்த சிவாகமங்களைக் கொண்டு சிவபூசைக்கு மட்டிலும் அதிகாரமுள்ள "தென ஸ்ரீகரபாஷியத்தில் விளக்கியுள்ளார். **இலிங்கதாரண சந்திரிகையில் நந்தீசுவர சிவாசாரியார்,** "முகம், பல் தேய்த்தலாதியவற்றால் தூயதாகி மந்திரோச்சாரணத்தால் உத்தமஅங்கமாகின்றது; அதனால் முகத்தை உயர்வெனக் கருதி மற்றவர் சரீரத்தின்மேல்உமிழ்தலினால் அம்முகம் தூய்மையற்றதெனக் கருதல்போல வீரசைவப்பெண்கள் மதாசாரியரால் கொடுத்தருளிய சிவலிங்கார்ச்சனையில் மாத்திரம் நீராடுதல்முதலியவற்றால் சூதகதோடமற்று உரியராகின்றனர். ஏனைய பாகஞ்செய்தல் முதலியவற்றிற்கு உரியராகார்" எனக்கூறியுள்ளார்.

நன்கொடைகள்.

1. நமது ஆறுவது வீரசைவ சித்தாந்த மகாசங்கத்தை இவ்வாண்டில் பொம்மயபாளயத்தின்கண் மடாலயத்தின் பெரும்பொருட்செலவினால் இரண்டு நாட்களும் யாதொரு குறைவுமின்றி நடாத்தி சங்கத்திற்கு வந்திருந்த தமிழ்ப்புலவர் முதலியவர்கட்குப் பரிசளித்து மகிழச்செய்த ஸ்ரீமத் ஞானராஜதானியான பொம்மபுரம் பெரியமடம் சிவகஞ்சி மயூராசல நிவாசயதீஸ்வரகர்த்தரான மயிலந் தேவஸ்தானம் ஆதீனபரம்பரை தர்மகர்த்தத்துவம் 18-வது பட்டம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞானபாலையசுவாமிகள்மகாசந்நிதானத்தின் அருட்பெருங்கொடையையும், சமயாபிமானத்தையும் இத்தமிழ்நாடும் வீரசைவவுலகமும் போற்றிப்புகழ்கின்றன.

2. ஆண்டுதோறும் நமது மகாசங்கத்தைப் பாராட்டி யுதவிவரும் பலவான்குடி திருவாளர், ராம. கும. சு. குமரப்பசெட்டியார் அவர்கள் இவ்வாண்டிலும் திருக்குற்றாலம் நீரருவியில் நீராடி மகிழ்ந்திருக்கும் நிலைமையின்கண் நமது மகாசங்கத்திற்காக ரூ. 25—0—0 மணியார்டர் செய்து பாராட்டிய நன்கொடைக்கு இம்மகாசங்கத்தார் நன்றிபாராட்டி அன்னாரது சுகவாழ்வை வேண்டுகின்றனர்.

3. வாலாஜாநகர் செச்சைவியாபாரம் ஸ்ரீமத் K. S. மல்லப்ப செட்டியாரவர்கள் தமது புதல்வி சௌபாக்கியவதி சங்கரம்மாள் ருதுசாந்தி முகூர்த்தத்தில் நமது வீரசைவப் பத்திரிகைக்கு நன்கொடையாக ரூ. 2—0—0 மணியார்டர்செய்து பாராட்டியுள்ளார்கள். குகையூர் ஸ்ரீமத் K. கந்தசாமி ஐயரவர்கள் தமது புதல்வியின் திருமணத்தில் நமது பத்திரிகைக்கு நன்கொடையாக ரூ 2—0—0 மணியார்டர் செய்துள்ளார்கள். இவ்விருவரது நன்றியையும் நிறைவேற்றற்சழகத்தார் பாராட்டுகின்றனர்.

நமது சந்தாநேயர்கட்கோர் அறிவிப்பு:—

——):o:(——

ஐயன்மீர் !

நமது வீரசைவத்திற்கு ৪-வது இதழும் வெளிவருகின்றது. பலமுறை சந்தாத்தொகையை மணியார்டர் செய்யவேண்டுமென வேண்டிக்கொண்டும் தங்கள் கவனத்தை இதன்கண் செலுத்தாத தைப்பற்றிக் கவல்கின்றோம். இனியும் தாழ்த்தாது சந்தாத் தொகையை அனுப்பிவைக்கும் நெறியிலாவது, வேறு வழியிலாவது தங்கள் கருத்தை இதன்கண் சிறிது செலுத்தவேண்டுமென வேண்டு கின்றோம்.

இங்ஙனம்,

நிறைவேற்றற் கழகத்தார்.

கட்டுரையெழுதும் கல்வியிற் பெரியார் கட்கோர் விண்ணப்பம் :—

மாண்பு மிக்கீர் !

மக்களுடைய காலப்போக்கு விரைந்து செல்லுதலின் கட்டுரை யென்பது சுருங்கிய சொற்றொடரில் விளங்கிய பொருளமைதிபெற்ற தாயும், காலத்திற்கேற்ப சமயம், சமூகம் இவற்றின் முன்னேற்றத் திற்குரியதாயும், தெளிவான நடையில் அச்சியற்றும் நிலைமையில் எழுதி மாதந்தோறும் 15-உக்குள் அனுப்பி உபகரிக்க விரும்பும்,

பத்திராசிரியர்.

சந்தா விவரம்.

ஆயுட் சந்தா முன்பணம் :—	...	25—0—0
ஆண்டுச் சந்தா :—	...	2—0—0
மாணவர்கட்கு :—	...	1—8—0
தனியிதழ்:—	....	0—4—0